**ஹப்புத்தளை நகர சபை - 2022**

-------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹப்புத்தளை நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் தொடர்பான கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஹப்புத்தளை நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது முன்பள்ளி பாடசாலைக்கும், சிறுவர் பூங்காவிற்கும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 700,000 ஆன உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நகர சபைக்குரியதாக காணப்பட்ட ரூபா 3,080,000 ஆன தீயணைக்கும் வண்டி, டக்கர் டேலர் மற்றும் 02 பௌஸர் டேலர் என்பன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் போது நகர சபை பொது நூலகத்திற்கு நன்கொடையாக கிடைத்த ரூபா 93,730 ஆன 110 நூலக புத்தகங்கள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்பு கணக்குகளில் அப்பெறுமதி குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டம் (LDSP) இன் மூலம் ரூபா 5,416,090 மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட பெண் பிரதிநிதிகளின் செயற்திட்டத்தை அமுல்படுத்துதலின் கீழ் கிடைக்கப் பெற்ற ரூபா 250,000 நிதி செயற்பாடுகள் தொடர்பான கூற்றில் மூலதன செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வைப்புக் கணக்கின் மூலம் சீராக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 கணக்கு விடயங்களுக்குரிய நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் மீதிக்கும் பட்டோலைகளின் பிரகாரமாக மீதிக்கும் இடையே கூட்டுமொத்தமாக ரூபா 61,235,584 இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கையுடன் இணங்குகின்றோம். | கணக்குகளை இணக்கம் செய்து சரியான மீதியை உள்ளடக்கி கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுப்பெறுமதி ரூபா 13,742,936 ஆன 04 சொத்து விடயங்களுக்குரிய மீதி உறுதிப்படுத்தல்களுக்காக கொள்வனவுக் கிரயம் அல்லது மதிப்பீட்டு அறிக்கை, பட்டோலை, கைப்பற்றல் கிரயம் அல்லது மதிப்பீட்டு அறிக்கை, ஆவணங்கள் மற்றும் பட்டோலைகள் சமர்ப்பிக்காமையின் காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கையுடன் இணங்குகின்றோம். | கணக்கு மீதிகளுக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

1.7 **இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| நிதிப் பிரமாணம் 571 | 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது வைப்புச் செய்யப்பட்ட ரூபா 47,823 பொது வைப்பு மீதி ஓய்வுபெறச் செய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்துரைத்த நடைமுறைகளின் பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | காலாவதியான பொது வைப்புக்கள் ஓய்வுபெறச் செய்யப்படல் வேண்டும். |

2. **நிதி மீளாய்வு**

2.1 **நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,033,166 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,284,701 ஆகும்.

2.2 **வருமான நிர்வாகம்**

2.2.1 **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரி | 1,950,000 | 2,024,552 | 1,486,337 | 538,215 | 2,100,644 | 1,598,868 | 1,337,267 | 261,601 |
| (ii) | வாடகை | 16,101,250 | 18,650,118 | 11,080,707 | 7,569,411 | 15,790,201 | 11,598,856 | 9,758,606 | 1,840,250 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணம் | 492,000 | 525,500 | 465,500 | 60,000 | 540,800 | 474,700 | 409,700 | 65,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,457,517 | 3,945,857 | 1,961,479 | 1,984,378 | 2,934,425 | 2,629,829 | 1,695,472 | 934,357 |
| | மொத்தம் | 21,000,767 | 25,146,027 | 14,994,023 | 10,152,004 | 21,366,070 | 16,302,253 | 13,201,045 | 3,101,208 |

**2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை வாடகை ரூபா 4,834,383 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கையுடன் இணங்குகின்றோம். | நிலுவை கடை வாடகை விரைவாக அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற சபைக்குச் சொந்தமான ஆதனங்களை வாடகைக்கு வழங்கியதற்காக அறவிட வேண்டிய ரூபா 1,541,673 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நிலுவை வாடகைப் பணம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |
| (இ) 2007 ஆம் ஆண்டின் போது நகர அபிவிருத்தி அதிகார சபையால் நகர சபைக்குரிய விருந்தினர் விடுதியை கையளிக்கும் போது பல சந்தர்ப்பங்களின் போது அந்த அதிகார சபையின் மூலம் நகர சபைக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 4,049,018 இனை அறவிடுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 24 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | சபைக்கு அறவிட வேண்டிய பணத்தை அறவிடல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்**

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தில் மாதாந்தம் 4500 டொன் கழிவுப் பொருட்கள் அளவில் சேகரிக்கப்படுவதுடன், கழிவுப் பொருட்களை கூறுகளாக்கும் இயந்திரம், டெக்டர் வண்டி மற்றும் சுகாதார தொழிலாளர்கள் இருவரின் சேவை ஈடுபடுத்தப்பட்டிருந்தது. 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகிளன் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கையுடன் இணங்குகின்றோம். | கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பாக முறையான அறிக்கை பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போது 396 பசளை மூட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டிருந்த போதிலும், பசளை உற்பத்தி தொடர்பாக முறையான அறிக்கையொன்று சபையின் மூலம் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் ஆண்டில் பசளை உற்பத்திக்கு செலவான கிரயம் மற்றும் பசளை விற்பனையால் கிடைக்கின்ற வருமானம் தொடர்பாக சரியான தகவல்களை கணிப்பிடுவதற்கு முடியாதிருந்தது. | | |
| (ஆ) | 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்தின் 23(ஆ) இன் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட கழிவுப் பொருள் எரித்தல்/ அகற்றுதலுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் கழிவுப் பொருள் உற்பத்தி செய்ய முடியாத உக்காத கழிவுப் பொருட்களை திறந்த நிலத்தில் போட முடியாதிருந்ததுடன், இயலுமான வரை மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களை வேறுபிரித்து மீள்சுழற்சிக்கு அனுப்பவேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது சபையினால் கேள்வி கோரி வழங்கப்பட்டிருந்த இறைச்சி, மீன் விற்பனை செய்கின்ற 04 நிலையங்களில் கழிவுப் பொருள் கழிவுகள் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அதன் அருகில் வடிகாணில் போடப்பட்டிருந்தது. | -மேற்படி- | பொது மக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாக கொண்டு ஆதன வரி அறவிடப்படுகின்றது. | 2022 திசெம்பர் 13 ஆம் திகதி புதிய ஆதன மதிப்பீட்டிற்காக விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. | ஆதன வரியை காலரீதியில் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது நகர சபை எல்லையில் மேற்கொள்ளப்பட்ட | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான | சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள |

| | | |
|---|---|---|
| மெய்மொய்யாய்வில் 57 வியாபார நிலையங்கள் வியாபார அனுமதிப் பத்திரம் பெறாதிருந்த போதிலும், நகர சபை அது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறிக்கையுடன் இணங்குகின்றோம். | வியாபாரங்கள் வருடாந்தம் மெய்மெய்யாய்வு செய்யப்பட்டு அவை ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 நவம்பர் மாதத்தின் போது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் ஹப்புத்தளை நகர சபைக்கு கையளிக்கப்பட்ட கம்பெக்டர் வழங்கப்பட்ட திகதியில் இருந்து மீளாய்வாண்டு வரையிலும் 08 வருடங்கள் பயனற்று வாகன தரிப்பிடத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்தது. | விற்றுத் தீர்ப்பதற்காக கோரிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பயனற்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2012 மார்ச் 05 ஆம் திகதி ஹல்துமுல்ல பிரதேச சபையினால் ஹப்புத்தளை நகர சபைக்கு கையளிக்கப்பட்ட கை உழவு இயந்திரம் கிடைத்த திகதியில் இருந்து விளைவற்று காணப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |